3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) கவன ஈர்ப்புகள்—துறைகள் விரைந்து பதில் அனுப்ப வலியுறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55(3)-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அனுமதி பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட முன்னறிவிப்புக்களுக்கான விவர அறிக்கைகள் பெரும்பாலான துறைகளிலிருந்து உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்பெறுவதில்லை என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அனுமதிக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகளைப் பேரவைச் செயலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கத் துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்துத் துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது முதல் முப்பத்தைந்தாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.